Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி தை 24 ஆம் நாள் ஷவ்வால் பிறை 3 (6-2-65) சனிக்கிழமை இதழ் 358

ஈழநாடு
சந்தா விபரம்

| | இந்தியா — இலங்கை வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# சீனத் தலைநகரில் ரஷ்ய பிரதமர்

## இருநாட்டு அபிப்பிராய பேதம்பற்றி பேசுவார்

## சூ-என்-லாய் வரவேற்றார்

பீகிங், பெப். 5

**சோவியத் பிரதம மந்திரி திரு. கோஸிஜின், ஏராளமான அங்கத்தினர்கள் கொண்ட தூது கோஷ்டியுடன் சீனத் தலைநகர் பீகிங்குக்கு இன்று வந்து சேர்ந்தார். சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் அவரை வரவேற்றார்.**

ரஷ்யப் பிரதமர் வடவியட்நாமுக்குச் சென்றுகொண்டிருக்கிறார். வழியில் அவர் பீகிங்கில் இறங்கி ஒரு நாள் தங்கிவிட்டுப் புறப்படுவார். இன்றைய தினம் சீனத் தலைவர்களுடன் சீன-ரஷ்ய அபிப்பிராயபேதத்தை தீர்ப்பது பற்றி அவர் பூர்வாங்கமாக பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச விவகாரங்களிலும் சித்தாந்தக்கொள்கை விஷயத்திலும் இரு நாடுகளுக்கு மிடையே இப்போது பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதாய், ரஷ்யப் பிரதமரின் பீகிங் விஜயம் சிரத்தையைக் கிளப்பியிருக்கிறது.

ரஷ்யா கேட்டுக்கொண்டதற்கிணங்க, பேச்சுவார்த்தை நடத்த சீனத் தலைவர்கள் இணங்கியிருக்கிறார்கள்.

திரு கோஸிஜின் வடவியட்நாமில் மேற்கொள்ளவிருக்கும் முடிவு மிக முக்கியமானதாய் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

தென்வியட்நாமில் அமெரிக்க போர் நடவடிக்கை அதிகரித்திருப்பதால், கோஸிஜினின் வடவியட்நாம் விஜயம் எதிர் நடவடிக்கைகளை பலப்படுத்துவதாய் இருக்கும் எனக் கருதப்பட்டது.

மாபெருங்கூட்டம்

இலங்கைத் தமிழரசுக்கட்சி கோப்பாய்த் தொகுதி அபேட்சகர் பிரயவாதி திரு சி கதிரவேலுப்பிள்ளை அவர்களை ஆதரித்து 6-2-65 சனிக்கிழமை பி. ப 5-30 மணியளவில அச்சுவேலியில் நடைபெறும் பிரதம பேச்சாளர் திரு. செ இராசதுரை அவர்கள்

## 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதி

### ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் உதவி

'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் (கொழும்புக் கிளை) நிதி உதவி அளித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வரை 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு பணமாகவும், பொருளாகவும் 24 881 ரூபாய் 18 சதம் கிடைத்துள்ளது. நேற்றுப் பிற்பகல் வரை கிடைத்த தொகை விபரம்:

வி. இராமலிங்கம், சுன்னாகம் — 3-00

ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை) — 100-00

—

## காணி மந்திரி வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

காணி நீர்ப்பாசன மந்திரி திரு. வி டி ஜி கருணாரத்தின வட பகுதிக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

கிளிநொச்சியில் ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காக வரும் திரு கருணாரத்தின சமீபத்தில் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிடுவார்.

—

## தேசிய சுவீப்

பதுளை, வியாழன்

பதுளை நகரமண்டபத்தில் இன்று மாலை இழுக்கப்பட்ட 6-வது இலங்கை தேசிய சுவீப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் அதிர்ஷ்ட டிக்கெட்டுகள் வருமாறு:

முதற்பரிசு
11 P 0648 ரூ. 60,000

இரண்டாம் பரிசு
16 V 0864 ரூ. 19,336

மூன்றாம் பரிசு
[illegible] ரூ. [illegible]

(3-ம் பக்கம் பார்க்க)

## தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு உதவி

### 'ஈழநாடு' சூறாவளி நிவாரணநிதிச் சபையினர் மயிலிட்டியில் வழங்கினர்

யாழ்ப்பாணம், சனி

சூறாவளியினால் மயிலிட்டிப் பகுதியில் தலைவர்களை இழந்த சில குடும்பங்களுக்கு 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதியிலிருந்து, 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிச் சபையின் சார்பாக தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம், திரு. எம். கனகசபை, திரு. வி. ராஜசேகரம், 'ஈழநாடு' சூறாவளி நிதிக்கென நடத்தப்பட்ட கதம்ப விழாவில் கலந்துகொள்ள கொழும்பிலிருந்து வந்த ராஜ் கலைச்சுவை நாடகமன்ற இயக்குனர் திரு. எஸ். ராஜரத்தினம், திரு. வி. கந்தசாமி ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று உதவி நிதி வழங்கினர். உதவி பெற்ற குடும்பங்கள், உதவி விபரம் வருமாறு:

| | |
|---|---|
| க. பூபாலச்சந்திரன் தாயார், 4 பிள்ளைகள் | 40-00 |
| க. கணபதிப்பிள்ளை மனைவி, 4 பிள்ளைகள் | 30-00 |
| இ. ஜெயராமன் (விவாகமாகாதவர்) தாயார் (பெற்றோர் தகுக்குடையவர்கள்) | 10-00 |
| அ திரவியம் (விவாகமாகாதவர்) தாயார் | 20-00 |
| அ. சவரிமுத்து மனைவி, ஒரு பெண் குழந்தை (9வயது) | 20-00 |
| செ. அந்தோனிப்பிள்ளை (விவாகமாகாதவர்) தாயார் | 20-00 |
| கி. அந்தோனிமுத்து மனைவி, தகப்பன் | 10-00 |
| அ வேதநாயகம் மனைவி, 4 பிள்ளைகள் | 50-00 |
| ச. செல்லத்துரை மனைவி | 10-00 |
| எம். அந்தோனிப்பிள்ளை மனைவி, 8 பிள்ளைகள் (மூத்த பிள்ளைக்கு 16 வயது) | 85-00 |
| வி தம்பியப்பு மனைவி | 10-00 |
| எம். கனகசபை 3 பிள்ளைகளும் விவாகமானவர்கள் ஒரு பெண் இன்னும் விவாகமாகவில்லை | 10-00 |
| வி. பரராஜசிங்கம் மனைவி (கர்ப்பிணி) | 20-00 |
| எஸ். அருச்சுனன் (விவாகமாகாதவர்) 9 பிள்ளைகள் தாயார், (7 ஆண்கள், 2 பெண்கள்) | 50-00 |
| எஸ் செல்லத்தம்பி (விவாகமாகாதவர்) தகப்பன் ஒரு சகோதரன் (17 வயது), பெற்றோர் இருக்கிறார்கள் | 15-00 |
| ஏ குணரத்தினம் மனைவி, 5 பிள்ளைகள் (மூத்த பிள்ளைக்கு 9 வயது, கடைசிக் குழந்தை 9 மாதம்) | 85-00 |
| எஸ். லட்சுமிகாந்தன் மனைவி (கர்ப்பிணி) | 25-00 |
| சி. கந்தசாமி மனைவி 16 வயதுப் பிள்ளை | 20-00 |
| எஸ். பாலகிருஷ்ணன் மனைவி, 6 பிள்ளைகள் (மூத்த பெண்ணுக்கு 12 வயது) | 60-00 |
| எம் ஆசைப்பிள்ளை மனைவி, 3 பிள்ளைகள் (மூத்த பிள்ளைக்கு 4 வயது) | 50-00 |
| எஸ். குமாரசாமி மனைவி, வளர்ப்புப் பிள்ளை (11வயது) | 20-00 |
| எம் சோமசுந்தரம் மனைவி, 5 பிள்ளைகள் | 50-00 |
| எம் ஐயாத்துரை மனைவி, 6 பிள்ளைகள் (மூத்த பிள்ளைக்கு 11 வயது) | 60-00 |
| எஸ். துரைராசா மனைவி, ஒரு பிள்ளை | 20-00 |

(6-ம் பக்கம் பார்க்க)

## குடியேற்றம் பற்றி கடும் கட்டுப்பாடு

### பிரிட்டன் விதிக்கும்

லண்டன், பெப். 5

பிரிட்டனில் குடியேறும் பொதுநலவாயவாசிகள் மீது கடும் கட்டுப்பாடு விதிக்க அரசாங்கம் எண்ணியுள்ளது என உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

இதுசம்பந்தமாக குடியேற்ற அதிகாரிகளுக்கு புதிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

குடியேற அனுமதிக்குமுன் ஒருவர் என்ன காரணத்திற்காக பிரிட்டன் வருகிறார் என்பது பரிசீலிக்கப்படும்.

சாதாரண விஜயத்தை மேற்கொள்பவரா, அல்லது கல்வி கற்கும் பொருட்டு வருபவரா என்பது பற்றியும் ஆராய்வதுடன், அவர்களது நிஸ்தா வேலைகளும் கவனமாக ஆராயப்படும.

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு திறமான

★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பண ஆசைபிடித்து அலையும் உலோபியைப் போல, உன்மனம் ஈசுவரன்மீது ஆசைகொண்டு அலையட்டும்.

—ஸ்ரீ இராமகிருஷ்ணர்.


# ஈழநாடு

ELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'ELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தை மீ 24 உ (6-2-65)


## பிரதமரின் செய்தி

நாட்டு மக்கள் அனைவருக்கும் பூரண சுதந்திரம் உண்டென்றும் நாட்டின் முன்னேற்றத்துக்கு அனைவரும் ஒற்றுமையுடன் போராடவேண்டுமென்றும் சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மையான சுதந்திரத்தைப்பெறுவதற்கான போராட்டத்தை நாம் ஒற்றுமையுடன் நடத்தி, தாய் நாட்டைப் பாதுகாத்து முன்னேற்றுவதில் ஈடுபடுவோம் என சங்கற்பம் செய்வோம் என்று பிரதமர் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார். அந்நிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெற்றுவிட்டதென்பது உண்மையே, நாட்டை முன்னேற்றவேண்டுமென்பதிலும் அபிப்பிராய பேதமிருக்க முடியாது. ஆனால் நாடு விடுதலையடைந்து ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல, பதினேழு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இலங்கைக்குப் பின்னர் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் மிகக் குறுகிய காலத்திற்குள் பெருமளவில முன்னேற்றமடைந்துள்ளன. இலங்கைமட்டும் குறிப்பிடக்கூடிய வகையில் முன்னேறவில்லை யென்பது உண்மையே. இதற்குக் காரணம் என்ன? பிரதமர் குறிப்பிட்டிருப்பதுபோல் நாட்டு மக்கள் அனைவருக்கும் பூரணசுதந்திரம் இருப்பின் இதரநாடுகளைவிட இலங்கையும் பெருமளவில் முன்னேற்றம் அடைந்திருக்குமென்பது உறுதி.

பதினேழாவது சுதந்திர தினக் கொண்டாட்டம் நாட்டின் சகல பகுதிகளிலும் நடைபெறவில்லை யென்பதும் வடக்கு கிழக்குப்பகுதிகளில் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன வென்பதும் உண்மையே. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குப் பதிலாக மற்றொரு ஏகாதிபத்திய ஆட்சிதான் இப்பொழுது நடைபெறுகிறதென்ற மனப்பான்மை நாட்டின் ஒரு பகுதி மக்களிடம் குறிப்பாக சிறுபான்மை இனத்தவர் மத்தியில் நிலவுகிறதே இதற்குக் காரணம். நாடுவிடுதலையடைந்தபின் ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகள் நடந்துகொண்ட முறைதான் சிறுபான்மையினர் மனதில் இவ்வித அபிப்பிராயம் தோன்றுவதற்கு இடமளித்ததென்பதை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூட மறுக்கமுடியாது.

சுதந்திரம் ஒருசாராருக்கு மட்டும் உரியதென இனியும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் கருதுவதானால் வறுமை, அச்சம், பிணி, அறியாமை ஆகியவைகளிலிருந்து நாட்டை விடுதலை பெறச்செய்வது சாத்தியமாகாது. தேர்தல் முடிந்து எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நாடுபெற்ற சுதந்திரத்தை மக்கள் அனைவரும் அனுபவிக்கவும் நாட்டின் முன்னேற்றத்துக்காக சகலமக்களும் ஒன்றுபட்டு உழைக்கவும் தேசிய ரீதியில் சில திட்டங்களை வகுத்து அதன்படி செயலாற்றவேண்டும். ஒற்றுமை என்று பேசுவதால் மட்டும் அதை ஏற்படுத்திவிடமுடியாது. செயலில் காட்டவேண்டும்.

# உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டுத் தலையீடு

## விசாரணைக் கமிஷன் நியமிக்க வற்புறுத்துவார்களாம்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள்பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் வற்புறுத்துவோம் என்று ஜாதிக விமுக்தி பெரமுனாத் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் மேற்கத்திய நாடுகள் கம்யூனிஸ்ட் நாடுகள் ஆகியவைகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் பணம் எவ்வளவு செலவிடப்பட்டதென்பது அம்பலத்துக்குக்கொண்டுவரப்படுமென்றும் அவர் சொன்னார். நாட்டின் உள்நாட்டு அரசியலில், இங்குள்ள வெளிநாட்டு தூதரங்களும் அவற்றுடன் சேர்ந்த ஸ்தலஸ்தாபனங்களும் அதிகம் ஈடுபாடு கொண்டுள்ளனவென்பதில் தமக்குச் சிறிதும் ஐயமில்லையென திரு. ராஜரத்தின கூறினார்.

யு. என். பி. யின் உபதலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன செய்தி ஸ்தாபனம் ஒன்றின் நிருபருக்கு அளித்த பேட்டியில் உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டுத் தலையீடுபற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் நியமிக்கவேண்டியது அவசியம் என்றார். உள்நாட்டுவிவகாரங்களில் அந்நியத் தலையீடு அதிகரித்துள்ளது என்று திரு. ஜயவர்த்தன கூறினார்.

## "ஒரே கொள்கை ஒரே நோக்கம்"

தனுக்காய், வெள்ளி

சென்ற பதினறு ஆண்டுகளாக தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஒரே கொள்கையுடனும் ஒரே நோக்கத்துடனும் போராடி வரும் ஒரே கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதானென்றும் அதனால்தான் தமிழரசுக்கட்சி நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகிறதென்றும் கிளிநொச்சித் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமக்கு ஆதரவளிக்குமுகமாக நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பூநகரி வாடியடி மைதானத்தில திரு. நா. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு கா. பொ. இரத்தினம் மேலும் பேசுகையில், எமது கட்சிப் பிரதிநிதிகள் தங்களால் இயன்றவரை தொகுதி வேலைகளையும்செய்து தருவார்கள் என்று கூறினார்.

முன்னாள் செனட்டர் திரு ஜி. நல்லையா, திருவாளர்கள் வ. ந. நவரத்தினம், அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் பலரும் பேசினர்.

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை ரூபா 249-20 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 04 Q 0555 | 12 O 0173 | 02 F 0897 |
| 09 D 0[illegible]99 | 13 N 0923 | 14 W 0550 |
| 08 M 0073 | 04 J 0367 | 08 Q 0682 |
| 08 A 0285 | 08 U 0[illegible]61 | 11 L 0660 |
| 14 X 0223 | 02 E 0200 | 01 H 0180 |
| 15 A 0438 | 12 D 0205 | 17 O 0155 |
| 12 N 0513 | 09 S 0691 | 23 S 0974 |
| 02 K 0010 | 17 R 0008 | 12 U 0409 |
| 08 C 0978 | 02 R 0875 | 04 F 0058 |
| 09 L 0343 | 21 Y 0291 | 03 R 0502 |
| 22 O 0845 | 03 W 0931 | 09 X 0180 |
| 05 V 0850 | 11 B 0028 | 12 T 0577 |
| 18 J 0578 | 22 A 0963 | 10 E 0587 |
| 08 Q 0057 | 20 N 0595 | 03 L 0364 |
| 11 G 0246 | 09 B 0144 | 10 K 0723 |
| 06 A 0843 | 10 R 0808 | 23 O 0712 |
| 16 N 0417 | 19 A 0425 | 20 C 0973 |
| 18 Z [illegible]798 | 08 T 0194 | 04 D 0086 |
| 21 H 0501 | 05 V 0184 | 22 Z 0606 |
| 21 C 0355 | 09 C 0744 | 03 W 0704 |
| 10 S 0987 | 21 M 0574 | 17 P 0219 |
| 14 U 0100 | 15 W 0418 | 22 Z 0945 |
| 19 Q 0257 | 19 N 0990 | 04 Z 0335 |
| 13 O 0785 | 14 W 0826 | 09 G 0209 |
| 19 O 0427 | 02 Z 0440 | 18 Q 0727 |
| 08 J 0241 | 11 B 0886 | 15 Q 0261 |
| 05 L 0620 | 07 B 0600 | 10 S 0591 |
| 07 P 0859 | 17 R 0328 | 02 Y 0357 |
| 17 Y 0478 | 15 Z 0874 | 10 A 0583 |
| 18 Y 0108 | 16 Q 0289 | 07 O 0686 |
| 06 L 0108 | 14 K 0558 | 05 A 0522 |
| 06 F 0419 | 11 G 0615 | |
| 19 F 0518 | 09 W 0101 | |
| 13 K 0688 | 11 E 0300 | |

## பம்பாய், சென்னையில் இலங்கை சுதந்திரதினம்

பம்பாய், பெப். 5

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இங்குள்ள இலங்கை வர்த்தக கமிஷனர் நடத்திய வரவேற்பில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இதே போல் சென்னையிலுள்ள இலங்கை உதவிக் ஹைகமிஷன் நடத்திய விருந்திலும் மந்திரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## செய்திச்சுருக்கம்

இலங்கைக்கு சமஷ்டி அரசியல்தான் சிறந்தது என்று தமிழரசுக் கட்சி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வாதாடி வந்துள்ளதென்று இந்தியாவில் தலைசிறந்த இராஜதந்திரியாக விளங்கும் இராஜகோபாலாச்சாரி கூட இலங்கைக்கு சமஷ்டி அரசியல் முறைதான் சிறந்தது என்று கூறியிருக்கிறாரென்றும் மட்டக்களப்புத் தொகுதில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. செ. இராசதுரை தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

∴ ∴ ∴

சூறவளிக் காற்றினால் பாதிக்கப்பட்ட திருகோணமலைப் பகுதி அகதிகளுக்கு நிவாரணப் பணம் வழங்கும் வேலைகள் திருக்கோணமலைக் கச்சேரியிலுள்ள சமூக சேவைப் பகுதிக் கந்தோரில் கடந்த ஐந்து தினங்களாக நடந்து வருகின்றது. கட்டுச் சோறும் கையுமாகக் காலையிலிருந்து மாலை வரை கச்சேரியை முற்றுகையிட்டவண்ணமிருக்கும் இவ்வகதிகளுக்குத் தலா ரூபா 30 வழங்கப்படுகிறது.

∴ ∴ ∴

## ஜீவனும்ச வழக்கில் கணவனுக்குச்சிறை

ஊர்காவற்றுறை, வெள்ளி

மனைவிக்கு ஜீவனும்சப்பணம் கட்டத்தவறியதால் வேலணையைச் சேர்ந்த கந்தையா சதாசிவம் என்பவருக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் ஒரு மாதம் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

சதாசிவத்தின் மனைவி தவமணி தனக்கும் மூன்று பிள்ளைகளுக்குமாக ஜீவனும்சம் கோரித் தொடர்ந்த வழக்கில் எதிரி மாதம் 75 ரூபா கட்டவேண்டுமென நீதிபதி ஏற்கனவே தீர்ப்பளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எனது விஜயம் நட்புறவை மேலும் அதிகரிக்கும்

## டில்லியில் பர்மிய தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, பெப். 5

இன்று பிற்பகல் புதுடில்லி வந்து சேர்ந்த பர்மிய புரட்சி சபைத் தலைவர் ஜெனரல் நீவினுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதிராதாகிருஷ்ணன், அவரை வரவேற்றபின் பிரதமர் சாஸ்திரி, மந்திரிசபை அங்கத்தினர்கள், முப்படைத் தலைபதிகள், ராஜதந்திர தூதர்கள் ஆகியோருக்கு அவரை அறிமுகம் செய்துவைத்தார்.

அவரது விமானம் பாலத்தில் இறங்கியபோது 21 பீரங்கிக் குண்டுகள் போடப்பட்டன.

தாம் இந்தியாவுக்குப் புதியவரல்லவென்றும் நீண்டகால கலாச்சார,நட்புறவுத்தொடர்பு பர்மா- இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடைய நிலவிவருவதாயும் இந்த உறவு மேலும் அபிவிருத்தி அடையுமென நம்புவதாயும் நீவின் கூறினார்.

பின் பர்மியத் தலைவர் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் ராஷ்டிரபதி பவனுக்குப் புறப்பட்டார்.

# 5 அரசுமகாநாட்டுக்கு சீனவை சேர்க்கும் விஷயம்

## டிகால்யோசனைக்கு உலக எதிரொலி

லண்டன, பெப். 5

சீன உள்ளிட்டு 5 அரசுகள் மகாநாடு ஐ. நாவைத் திருத்தியமைப்பது பற்றி கூட்டப்படவேண்டும் என்ற டிகாலின் யோசனைபற்றி வாஷிங்டன், லண்டன், ஒட்டாவா ஆகிய நகரங்களில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

டிகாலின் யோசனைகள் பல பரிசீலனைக்கு உரியது என கனடா பிரதமர் திரு லெஸ்டர் பியர்ஸன் கூறினார்.

[illegible] சர்வதேச பிரச்னைகளை [illegible] [illegible] கனடா ஆதரிப்பதாய் வெளிநாட்டு மந்திரி திரு. பால் மார்ட்டின் கூறினார்.

5 அரசுகள் மகாநாட்டில் சீன கலந்து கொள்வதை கொள்கையளவில் கனடா வரவேற்பதாக பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

லண்டனில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்தில் டிகாலின் யோசனை சிரமத்தைத் தோற்றுவிக்கும் என்றும், சீன ஐ நாவில் இல்லாததும், போர்மோஸா ஐ நாவில் இருப்பதுமே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

ஆசிரியருக்குக்கடிதம்

## ஒரே மேடையில் 3 கட்சி அபேட்சகர்கள்

இம்மாதம் 4ந் தேதி 'ஈழநாடு' பத்திரிகையில் பருத்தித்துறைப் தொகுதி அபேட்சகர்கள் மூவரும் தொண்டமானாற்றில் ஒரே மேடையில் தோன்றித் தங்கள் கட்சிக் கொள்கைகளைப் பற்றிப் பேசிய பேச்சுக்களின் விபரங்களைப் படித்தேன். பிரதான விஷயங்கள் வெளிவரவில்லை.

கூட்டம் தொடங்குவதற்கு முன் ஒவ்வொரு அபேட்சகரும் எவ்வளவு நேரம் பேசலாமென்னும் விஷயம்பற்றி ஆலோசிக்கப்பட்டு ஈற்றில் ஒவ்வொருவரும் 45 நிமிஷங்களுக்குமேல் பேசப்படாதென்று தீர்மானிக்கப்பட்டு அத்தீர்மானத்துக்கு அமையவே ஒவ்வொருவரும் பேசினார்கள்.

முதலாவதாகப் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் தமது பேச்சைப் பேசிமுடித்தபின் இரண்டாவதாகப் பேசிய தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு க. துரைரத்தினம் மிகவும் வேகமாகவும், தெளிவாகவும் அநேக விஷயங்கள் பற்றித் தமக்குக் கொடுக்கப்பட்ட 45 நிமிஷத்திற்குக் குறையாத நேரத்தில் பேசி தமது பேச்சை முடித்தார். அவருடைய பேச்சின் சில மிகவும் பிரதானமான பகுதிகள் தங்கள் பத்திரிகையில் இடம்பெருமற்போனது வருத்தத்தக்கது. முதலில் மொழி, நாடு, பிரசாவுரிமை, சமஷ்டி ஆகிய நான்குமே தம் கட்சியின் தூண்களென திரு. துரைரத்தினம் வர்ணித்தார்; அழிந்து வரும் மொழி, பறிபோகும் நாடு ஆகியவற்றை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குச் சமஷ்டியாட்சி முறையே தங்கள் கட்சி தமிழ்மக்களுக்குக் கொடுக்கும் சஞ்சீவி என்பதை வலியுறுத்தினர்.

இந்த ஆட்சிமுறையை நடத்துவதற்குப் போதிய பொருள் வளம் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறி கனிவளம், கைத்தொழில், கமத்தொழில்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வட, கீழ் மாகாணங்களில் பிரதான கைத்தொழிலாகிய மீன்பிடி கருவாடு உற்பத்தி பற்றியும் இந்தப் பொருட்கள் பிறநாடுகளிலிருந்து நம் இலங்கைக்கு எத்தனை கோடி ரூபாய்களுக்கு ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பது பற்றியும் புள்ளிவிபரங்களுடன் காட்டினார். மன்னார் பிரதேசத்தின் எண்ணைச் செல்வத்தைப் பற்றிக் கூறியும் வவுனியாப் பிரதேசத்தின் வளம் முற்ற பூமியை வளம் குறைந்த கற்பாறைகள் நிறைந்த இஸ்ரேல் நாட்டுடன் ஒப்பிட்டும் அறிவைப் பெருக்கி நம்பிக்கை ஊட்டி உற்சாகப்படுத்தினர்.

தமிழரசுக்கட்சியினர் தங்கள் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு தென் இலங்கையில் யார் முன்வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்றும், ஆனால் தாங்கள் எந்தக் கட்சியினரையும் நம்பியிருக்கவில்லை யென்றும், மகாத்மாகாந்தியால் தோற்றுவிக்கப்பட்டுச் சிறிது காலத்துக்கு முன்னரும் அமெரிக்க கறுப்பர்களின் தலைவரும் உலக சமாதான நோபல் பரிசைப் பெற்றவருமாகிய மாட்டின் லூதர்கிங் என்பவரால் பாவிக்கப்பட்டு, பலவிதமான அணு ஆயுதங்களைத் தாங்கிய அமெரிக்க வல்லரசை அடிப்பணியச் செய்த "சத்தியாக்கிரகம்" என்னும் ஆயுதத்தையே நம்பியிருப்பதாகவும் அவர் கூறினர்.

செ. நாகலிங்கம்.
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சீனாவுடன் சேர்ந்து ஐ.நா.வை திருத்தியமைக்க வேண்டும்! ஐரோப்பிய பிரச்னைகளை ஐரோப்பாவே தீர்த்துக் கொள்ள முடியும்"

## பிரெஞ்சு அதிபர் டிகாலின் மூன்று வெடிகுண்டுகள்

பாரிஸ், பெப். 5

ஐ. நா.வை ஒரு சமநிலை ஸ்தாபனமாக்கும் வகையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, செஞ்சீனு ஆகிய 5 வல்லரசுகள் கூடி அதன் சாஸனத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டி'காால் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறினர். இந்த மகாநாடு ஜெனிவாவில் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறினர்.

டிகாலின் அறிவிப்பைக் கேட்க 1000-க்கதிகமான நிருபர்கள் கூடியிருந்தனர்.

இவ்விஷயத்தில் 5 வல்லரசுகளும் ஒரு இணக்கமான முடிவுக்குவர வேண்டும் என்றும் அவர் கூறினர்.

### ஜெர்மன் பிரச்னை

பிரான்சும் ஜெர்மனியும் ஒரு ஏற்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் பிளவுபட்ட ஜெர்மன் பிரச்னையைத் தீர்ப்பதில் கிழக்கு—மேற்கு ஐரோப்பாவே ஆவன செய்ய வேண்டும் என்றும் ஐரோப்பிய பிரச்னைகளை ஐரோப்பாவே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் ஜெனரல் டிகால் கூறினர்.

### டாலர் வேண்டாம்

சர்வதேச மானிட்டரி நிதியை டாலரிலிருந்து தங்கத்தின் அடிப்படைக்கு மாற்ற வேண்டும் என்ற யோசனை கூறிய டிகால், பொதுச்சந்தை நாடுகளின் தங்கக் கையிருப்பு அமெரிக்காவின் கையிருப்பைப் போல் பலமாக இருப்பதாயும் குறிப்பிட்டார். இவ்விஷயம் பற்றி ஆராய சர்வதேச மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர்.

பிரிட்டனுடன் பிரான்சுக்குள்ள உறவுபற்றி திரு வில்சன் பாரிஸ் வரும்போது விவாதிக்கப்படும் என்றும் டிகால் அறிவித்தார்.

பிரான்ஸ், அராபிய நாடுகளுடன் தனது உறவை அபிவிருத்தி செய்து வருகிறது என்றும் அவர் கூறினர்.

ஐ. நா. பொதுச்சபைக்கு அளவுக்குமேல் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் காங்கோ போன்ற பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் அது தலையிட்டுவருவதாயும் ஜெனரல் டிகால் மேலும் கூறினர்.

ஐ. நா.வுக்கு பிரான்ஸ் செலுத்த வேண்டிய பாக்கிப் பணம்பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

---

# இளவரசர் பூமிநொஸாவான் தப்பி ஓடிவிட்டார்

## லாவோவில் மற்றோர் நாடகம்

வியன்டியன், பெப். 5

லாவோஸ் வலதுசாரித் தலைவர் பூமிநொஸாவானும், பொலிஸ் தலைவரும் நாட்டை விட்டு ஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. கிழக்கே தாய்லாந்து எல்லையை நோக்கி அவர்கள் செல்வதாய்க் கூறப்பட்டது.

லாவோஸில் இளவரசர் சுவர்ணபூமாவின் நடுநிலைமை அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற ராணுவப் புரட்சிக்கு பூமிநொஸாவான் தான் காரணமென சுவர்ணபூமா குற்றஞ்சாட்டியிருந்தார்.

நேற்று நடுநிலைமைத் துருப்புகள் ஓடிப்போனவர்களின் இல்லங்களைத் தாக்கின. அப்போது இல்லங்களைப் பாதுகாத்து நின்ற 1000 துருப்புகள் சரணடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

தாய்லாந்துக்குள் 15,000 லாவோஸ் அகதிகள் வந்திருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

லாவோஸிலுள்ள சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனைச் சேர்ந்த இந்தியா, கனடா, போலந்து பிரதிநிதிகள் பத்திரமாய் இருப்பதாகவும், வேறு இரு இந்தியர்கள் படுகாயமடைந்திருப்பதாயும் கூறப்படுகிறது.

கனடியத் தூதராலயம் மோட்டார் பீரங்கிகளால் தாக்கப்பட்டுச் சேதமடைந்தது.

தப்பிச் சென்ற பூமிநொஸாவானையும், பொலிஸ் தலைவரையும் பிடிப்பதற்கு மலைச்சாரல்களில் ராணுவப் பொலிசார் தேடிவருகின்றனர்.

---

# அமெரிக்காவில் துரித எதிரொலி

வாஷிங்டன், பெப். 5

சர்வதேச மானிட்டரி நிதியை தங்கத்திற்கு மாற்ற வேண்டுமென்ற டிகாலின் அறிவிப்பு அமெரிக்க திறைசேரி அதிகாரிகளிடையே உடனடியாக எதிரொலியை ஏற்படுத்தியது.

அமெரிக்க நிர்வாகமும் உடனடியாக இதுபற்றிக் கருத்து தெரிவித்தது.

டாலர் நாணயத்தின் மதிப்பு சீராகவே இருப்பதாயும், கடந்த 30 வருடங்களுக்குமேல் டாலரே இந்நிதியின் அடிப்படையாக இருந்ததென்றும் அவர்கள் கூறினர்.

ஜனாதிபதி ஜோன்ஸன் இது பற்றித் தெரிவிக்கையில் ஐ. நா.வைத் திருத்தியமைப்பது பற்றி ஆலோசிக்க அமெரிக்கா தயாராய் இருந்தபோதிலும் ஐ. நா.வில் அங்கத்தினராய் இல்லாத சீனாவை அதில் சேர்ப்பதை ஏற்காது என்று கூறினர்.

ஐ. நா. சாஸனத்தில் தவறு எதுவும் இல்லையென்றும் சாஸனத்தை மீறுபவர்களால்தான் அதற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்றும் ஜோன்ஸன் கூறினர்.

---

## ஆங்கிலத்தில்

புதுடில்லி, பெப். 5

விஞ்ஞான தொழில் நுட்பக் கல்விக்கு ஆங்கிலத்தையே தொடர்ந்து பயன்படுத்துவதென அகில இந்திய தொழிற் கல்வி சபை முடிவுசெய்திருக்கிறது.

---

## அமெரிக்க விமானங்களுக்குத்தடை

ஜாகர்த்தா, பெப். 5

ஜாகர்த்தா விமான நிலையத்தின் ஓடுபாதைகளை உபயோகிக்க அமெரிக்க விமானங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் மலேஷிய கொள்கையே இதற்குக் காரணமாம்.

---

## எர்ணகுளத்தில் 10 மாடி ஹோட்டல்

எர்ணகுளம் பெப் 5

எர்ணகுளத்தில் 10 மாடிகள் கொண்ட உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

---

## பிரிட்டனில் கள்ளக் குடியேற்றம்

லண்டன், பெப் 5

கடந்த 2 வருடங்களில் 10000 பேர் கள்ளத்தனமாக பிரிட்டனில் குடியேறியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

---

## காஜு எதிர்க்கட்சித் தலைவர் காலமானர்

ஆக்ரா, பெப் 5

சிறைவைக்கப்பட்டிருந்த 70 வயதான காஜு எதிர்க்கட்சித் தலைவர் காலமானர்.

---

## பாகிஸ்தானில் பிரெஞ்சு பிரதமர்

கராச்சி, பெப். 5

பிரெஞ்சு பிரதம மந்திரி திரு. பொம்பிடோ இன்று கராச்சி வந்துசேர்ந்தார். வெளிநாட்டு மந்திரி பூட்டோ அவரை வரவேற்ஞர்.

---

## காங்கோ தூதர் திரும்பினர்

கெய்ரோ, பெப் 5

ஐக்கிய அராபியக் குடியரசிலுள்ள காங்கோ தூதர், காரியாலயத்தை மூடிவிட்டு தாயகம் புறப்பட்டார்.

---

நியூயோர்க், பெப் 5

சைப்பிரஸில் ஐ. நா. பராமரிப்புப் பணிக்கு மேலும் நிதி உதவிபுரியுமாறு யூதாண்ட் 63 நாடுகளை [illegible] கேட்டிருக்கிறர்.

---

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆங்கிலம் அவசியம்

## ராமஸ்வாமி ஐயர் கருத்து

சென்னை, பெப். 5

"உலக சிந்தனைகளுடனும், உலக இயக்கங்களுடனும் நெருங்கிய தொடர்பை நீடிக்க ஆங்கிலம் மிகச் சிறந்த சாதனம். நாட்டிலுள்ள பல்வேறு தலைவர்களிடையே அரசியல், கலாச்சார, சமய ஒற்றுமையை ஸ்திரப்படுத்தியதற்கு ஆங்கில ஞானமே காரணம்" என டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் கூறினர்.

"ஆங்கிலத்தின் ஸ்தானத்தை பயனுள்ள வகையில் இந்திய பிராந்திய மொழி ஏதாவது அடையும்வரை ஆங்கிலத்தைக் கைவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டு வேறுமொழியை கொள்ளக்கூடாது" என்றும் ஸி. பி. கூறினர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளம், மராத்தி போன்ற மிகுந்த அபிவிருத்தி அடைந்த மொழிகளிலும், ஹிந்தியிலும் பெரும் சக்தியை நான் உணராமல் இல்லை. ஆனல் ஹிந்திமொழி, தமிழ் போன்ற மொழியை விட அபிவிருத்தி குறைவானது. அது அவ்வளவு புராதனமானதும் அல்ல என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம், சிந்தனை முதலிய துறைகளில் மற்ற உலக மொழிகளின் அளவை இந்திய மொழிகள் அடைவதற்கு அதிக பூர்வாங்க வேலை அத்தியாவசியம்" என்றும் ராமஸ்வாமி ஐயர் கூறினர்.

---

## பீகிங்கில் ரஷ்ய பிரதமர்

பீகிங், பெப். 5

ரஷ்யப் பிரதம மந்திரி திரு கோஸிஜின் ஹனோய் செல்லும் வழியில் இன்று பீகிங் வருகிறர். சீனத் தலைவர்களுடன் அவர் பேச்சுநடத்துவார்.

ரஷ்யாவின் கோரிக்கைக் கிணங்கவே திரு. கோஸிஜினைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டது என சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென் யீ கூறியிருக்கிறர்.

---

## ஜூன் மாதம் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

லண்டன், பெப். 5

சாம்ராஜ்யப் பிரதம மந்திரிகள் மகாநாடு வருகிற ஜூன் மாதக் கடைசியில் நடத்தப்படும் என பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் காமன்ஸ் சபையில் அறிவித்தார். நிச்சயமான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தம்மை இந்த மகாநாட்டுக்கு அழைக்கவில்லை என தென் ரொடீஷிய பிரதமர் திரு. ஸ்மித் குறை கூறியிருக்கிறர்.

---

## இந்தியாவுக்கு பிரிட்டன் உதவும்

லண்டன், பெப். 5

இந்தியா பிரிட்டனிடமிருந்து பாதுகாப்பு எதையும் கோரவில்லை என்றும் ஆனல் இந்தியா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பிரிட்டன் உதவிக்கு விரையும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் கூறினர்.

---

## ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, பெப். 5

லாவோஸில் அமெரிக்கா குண்டு வீசியதை ரஷ்யா கண்டித்திருக்கிறது.

---

## டில்லியில் நீவின்

புதுடில்லி, பெப். 5

பர்மா புரட்சி சபைத் தலைவர் ஜெனரல் நீவின் தமது மனைவி மந்திரிகள் சகிதம் புதுடில்லி வந்தார். நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அவரை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் விமான நிலையத்தில் வரவேற்ஞர்.

---

## "மலேஷியாவுக்கு உதவுவோம்"

லண்டன், பெப். 5

இந்தோனேஷியாவுடன் சமாதானமாக வாழவே ஆஸ்திரேலியா விரும்புகிறதென்றும், ஆனல் மலேஷியா தாக்கப்பட்டால் அதற்குச் சகல வகையிலும் உதவி செய்வோம்" என்றும் ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ரபர்ட் மென்ஸீஸ் லண்டனில் கூறினர்.

மலேஷிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தற்போதைக்கு அமெரிக்காவின் உதவியை மலேஷியா கோரவில்லை என்ஞர்.

நியூஸிலந்து பிரதமர் திரு. ஹொலியோக் போர்னியோவுக்கு நியூஸிலந்து துருப்புக்கள் அனுப்பப்படும் எனக் கூறினர்.

---

## பம்பாயில் விலை வீழ்ச்சி

பம்பாய், பெப். 5

பம்பாயில் சில தினங்களாக நடைபெற்ற வருமானவரி அதிகாரிகளின் கள்ளப்பண வேட்டையைத் தொடர்ந்து பல பொருட்களின் மொத்த விலைவாசியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

---

## கவர்னர் பதவி ஏற்க மறுப்பு

எர்ணகுளம், பெப். 5

கவர்னர் பதவியை ஏற்றுக்கொள்ள திரு. ஏ. பி. ஜெயின் விரும்பவில்லையாதலால், கேரள கவர்னர் பதவிக்குப் புதிய ஒருவரைத் தெரிந்தெடுக்கும் பிரச்னை இந்திய அரசாங்கத்தை எதிர்நோக்கியுள்ளது.

---

## காந்திஜி நினைவு தினம்

சாவகச்சேரி, வெள்ளி

யாழ். காஷ்றுமி மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திரு ஆர். கந்தையாவின் தலைமையில் காந்திஜி நினைவுதினவிழா நடைபெற்றது. பிரதம பேச்சாளராக சாவகச்சேரி முன்னுள் எம். பி திரு வ. ந. நவரத்தினம், டண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், கைதடி கிராமசபைத் தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை, திரு. ஜோசேப் ஆகியோர் கலந்துகொண்டனர். இறுதியில் இந்துமாணவர் சமூகத் தலைவர் திரு. சோமசுந்தரம் நன்றி கூறினர்.

---

## நாசவேலையல்ல

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் பொருட்காட்சியில் நீர்க்கூரக்கும் ஒரு பகுதி பொறிந்து விழுந்ததைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய விசாரணையின் பயனாக இச்சம்பவம் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட நாசவேலை அல்ல என்று தெரிவித்துள்ளார்கள். இந்த நீர்க்குழாயைக் கட்டிமுடிப்பதற்கு 5000 ரூபா செலவாகியுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில் விசேஷ நிகழ்ச்சிகள்

நல்லூர், சனி

இலங்கையின் 17-வது சுதந்திர தினத்தையொட்டி வட பகுதியிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரையிலும், நயினாதீவு நாகவிகாரையிலும் சுதந்திர தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சுதந்திர தின விழாவை முன்னிட்டு தமிழ்ப் பிரதேசங்களில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. உள்ளூராட்சி மன்றங்கள்மீது கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

கிராம சேவையாளர்கள் மூலம் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன.

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் நேற்றுக் காலை அபிஷேக ஆராதனைகளும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன. மாவிட்டபுரம் கிராமசேவையாளர் திரு. நடராஜா இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## நாலு ஊசிகளை விழுங்கிய பெண்

யாழ்ப்பாணம், சனி

ஒரு இளம் பெண் நாலு தையல் ஊசிகளை வாயில் வைத்திருக்கும்பொழுது தற்செயலாக விழுங்கியதன் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்த ஊசிகள் இன்னமும் வெளியே எடுக்கப்படாததால் உடம்பில் ஊசிகள் செல்லும் பகுதிகளில் வேதனை ஏற்படுகிறதாம். முன்னரும் இந்தப் பெண் ஒருமுறை ஊசியொன்றை விழுங்கிப் பின்னர் வெளியில் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## சமாஜகோஷ்டியினரின் சுற்றுப்பிரயாணம்

சுழிபுரம், வெள்ளி

யாழ். மாவட்ட சன சமூக சமாஜத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாச்சார சுற்றுப்பிரயாணம் இம்மாத கடைப் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இக்கோஷ்டியில் நூறுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருக்கின்றார்கள். சுற்றுப்பிரயாண கோஷ்டியினர் தென் இலங்கையில் சன சமூக நிலையங்கள் இயங்கும் முறையையும் சரித்திர சம்பந்தமான பிரதேசங்களையும் பார்வையிடுவர். கொழும்பில் நடைபெறும் கலாச்சார சம்பந்தமான கருத்தரங்கொன்றில் கலந்து கொள்ளவும் ஏற்பாடாகி உள்ளது எனவும் தெரியவருகின்றது.

## சூறாவளியால் தேயிலை சேதம்

கொழும்பு, வெள்ளி


தேயிலை அடைக்கப்பட்ட 2000 பெட்டிகள் சமீபத்தில் திருகோணமலையில் வீசிய சூறாவளி காரணமாக சேதமடைந்துள்ளன. இவை திருகோணமலையிலிருந்து லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்தன.

## ஜெர்மன் பிரச்னை

பொன், பெப். 5

கிழக்கு ஜெர்மன் ஜனாதிபதி உல்பிரைட் கெய்ரோவுக்கு விஜயம் செய்யுமாறு அழைக்கப்பட்டிருப்பது குறித்து, தற்போது எதிர் நடவடிக்கை எடுப்பதில்லை என மேற்கு ஜெர்மனி தீர்மானித்திருக்கிறது.

## திருப்பணி நிதிக்காக கலைவிழா



உரும்பராய், சனி

உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோவில் தேர் கொட்டகைத் திருப்பணி நிதிக்காக இன்று மாலை உரும்பராய் சைவத் தமிழ்வித்தியாசாலையில் கண்டி மராமத்து இலாகாவைச் சேர்ந்த திரு. வே. த. செல்வத்துரை தலைமையில் கலைவிழா நடைபெறும்.

இசை, நடனம், நாடகம் ஆகியவை இடம்பெறும் இக்கலைவிழாவில் இலங்கை வானொலி நாடகத் துறைத் தலைவர் திரு. எஸ். சண்முகநாதனின் (சானா) மத்தாப்பு நாடக நிகழ்ச்சிகளும், ராஜ் நகைச்சுவை நாடகமன்றத் தலைவர் திரு. ராஜரத்தினத்தின் நகைச்சுவை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## யோகபுரம் கொலை வழக்கில் இரு எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, புதன்

வலணிக்குளம், யோகபுரம் கொலை வழக்கில் விசாரணையின்பின் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரொபர்ட் சில்வா முதலாம் எதிரியைச் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்கவும், இரண்டாம், மூன்றாம் எதிரிகள் விடுதலை செய்தும் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் யோகபுரத்தில் வல்லிபுரம் என்பவரின் மனைவி கண்ணுத்தையை அடித்துக் கொலை செய்ததாக வி. கோவிந்தபிள்ளை, சு. கோவிந்தபிள்ளை, முதலாம் எதிரியின் மகன் கோ. ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய மூவர்மீதும் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரமும், வழக்காளி தரப்பில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. தேவசகாயத்தின் உதவியுடன் திரு. சி. பாலகிருஷ்ணனும் ஆஜரானார்கள்.

இவ்வழக்கு நேற்றுக் காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரிகளின் வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்தினார். அப்பொழுது அவர் இரண்டாம், மூன்றாம் எதிரிகள்மீது கொலைக் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி அவர்களை விடுதலை செய்யுமாறு கோரினார். நீதிபதியும் முதலாம் எதிரியை சுப்ரீம்கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டு மற்றைய எதிரிகளை விடுதலை செய்தார்.

## இரண்டு வாரத்திற்கு இலவச அரிசி

கொழும்பு, வெள்ளி

குடிக்கும் தண்ணீருக்கு இலங்கையிலுள்ள பல பகுதிகளிலும் மிகவும் கஷ்டமும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக சமூக சேவா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அந்த அதிகாரியின் கருத்துப்படி யாழ்ப்பாணம், கீழ்மாகாணம், வட மத்திய மாகாணம், தென் மாகாணம் முதலிய பகுதிகளில் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இடங்களிலுள்ள கமக்காரர்களுக்கு வரட்சி நிவாரணமாக மாதம் ரூபா 20 கொடுப்பதற்கு பதிலாக இலவச அரிசி இரண்டு வாரத்திற்கு வழங்குவதென்று சமூக சேவா அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.





இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.

★



டப்ளியூ. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.



ஹைவிட்டாமீல்

என்பதின் பொருள்

உங்கள் பண்ணை உயிரினங்களிலிருந்து ஆகக்கூடுதல் ஆதாயத்தை பெறுவீர்கள் என்பதே.

கால் நடைகளினதும், கோழி முதலிய பறவைகளினதும் எல்லா தீன்களும் ஒரே மாதிரிதான என்பதாக அனேகர் கருதுகிறார்கள். அவை அப்படியல்ல. அவற்றில் அனேக வித்தியாசங்கள் இருக்கின்றன. வித்தியாசங்கள் என்பது நீங்கள் அடையும் கூடுதல் அல்லது குறைந்த ஆதாயத்தை கொடுப்பதுதான்.

ஏனெனில் ஹைவிட்டா

* கூடுதல் போஷாக்கையும் தாதுப் பொருட்களைக்கொண்ட கால்நடைத் தீனி.
* இலகுவாக கலந்து உடனடியாக சிரணமாகிறது.
* அதி நவீன பக்குவ முறைப்படி கட்டுப்பாடான நிலைமைகளில் ஆரோக்கியமான விதத்தில் நெடுங்காலம் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடியதாக தயாரிக்கப்படுகிறது.
* கோழிக்குஞ்சுகளுக்கும், நடுத்தரகோழிகளுக்கும் முட்டையிடும் கோழிகளுக்கும்இன்றியமையாத ஓர் கலவை தீன்.

உங்கள் பண்ணையில் உயிரினங்களுக்கான ஆதாயத்தை கொடுக்கும் தீனியை வாங்க திட்டமிடும்போது ஹைவிட்டா தீனியையே வாங்குவதென திட்டமிடுங்கள்.




ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல
டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வட இலங்கை சங்கீத சபையினர் 1964-ம் வருடத்தில் நடத்திய பரீட்சையில் சித்திபெற்றோர் விபரம் வருமாறு:—

**சாவகச்சேரி**

ஆசிரியர்பகுதி

சாதாரணபிரிவு வாய்ப்பாட்டு

கனகநாயகி கனகரத்தினம்.

சாதாரண பிரிவு வயலின்

நீலாம்பிகை செல்லையா.

ஐந்தாம்பகுதி நூனசித்தி

வாய்ப்பாட்டு

மங்கையற்கரசி வேலுப்பிள்ளை, புவனராணி பொன்னையா மகாரஞ்சிதம் பதஞ்சலி மகாலட்சுமி பதஞ்சலி. ஜெகதாம்பிகை கணபதிப்பிள்ளை, நாகேஸ்வரி வல்லிபுரம்.

முதலாம்பகுதி சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

இராசநாயகி இராசகுலசிங்கம், கலாநிதி பொன்னுத்துரை, சாரதாதேவிகந்தையா, ஞானசக்தி கந்தையா, உஷாதேவி சிவசுப்பிரமணியக்குருக்கள், தியாகேஸ்வரி ஆறுமுகம், சரோஜினிதேவி கனகசபை, சாந்தமலர் அபிவாசகம், சந்திராதேவி அருணாசலம் இந்திராணி அருணாசலம்.

**பருத்தித்துறை**

ஆசிரியர்பகுதி சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

இந்திராணி சபாரத்தினம்.

ஐந்தாம்பகுதி சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

அன்னபூஷணம் இராமலிங்கம்.

நூனசித்தி வாய்ப்பாட்டு

சூரியகுமாரி குமாரசாமி, பரமேஸ்வரி சின்னையா.

முதலாம்பகுதி சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

பத்மினி தர்மவரதர், கதிர்காமநாதன் சுப்பிரமணியம், இந்திராதேவி விசுவநாதர், மனோன்மணியம்மா இரத்தினசபாபதி ஐயர், பத்மாதேவி கந்தப்பு, தேவி ஆறுமுகம், செல்வராணி குணரத்தினம், நிர்மலாதேவி பொன்னம்பலம், யோகேஸ்வரிசின்னையா, விஜயலெட்சுமி ஆறுமுகம்.

**யாழ்ப்பாணம்**

ஆசிரியர்பகுதி சாதாரணபிரிவு

வாய்ப்பாட்டு

அருந்ததிசிவசுப்பிரமணியம், இராசதேவி சபாபதி, சௌபாக்கியலெட்சுமி மாணிக்கம், சந்திரமதி சதாசிவம்.

(மிகுதி திங்கட்கிழமை தொடரும்.)

—

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

கைதடி செவிடர், ஊமைப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் புதிய விடுதிச்சாலையின் திறப்பு விழாவும்வருகிற செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. பிரதான விருந்தினராக எஸ். கே. பங்கர் கலந்துகொள்கிறார். திருமதி எஸ. கே. பங்கர் பரிசில்கள் வழங்குவார்.

வண. ஹரல் டீ சொய்ஸா புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 6-2-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 13-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இஸ்லாமிய நிகழ்ச்சிகள் 7-05 பாட்டு — விஜயலட்சுமி குமாரசாமி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-00 பேச்சு, 9-30 சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 7-2-65

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-46 சங்கீதவகுப்பு, 8-00 பௌத்தபோதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் தமிழ் பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம்' 1-00 குதூகலம்,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — இந்திரா பாலசுப்பிரமணியம், 5-45 திரைஇசை.

---

### தேவை

இரும்புவேலை (வாசிக்கால், கேற்) அலுமினிய வேலை செய்பவர்கள் தேவை. தேர்ச்சிக்கு தக்கபடி சம்பளம் கொடுக்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும்: பட்டின இரும்பு வேலைச் சங்கம், 48, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1643

---

கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

17ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 169—1961 இன் 60ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (1)ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளுராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபைகளின் கூட்டங்களை அந்த அட்டவணையின் பத்தி II ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில்; அந்த அட்டவணையின் பத்தி III ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரங்களில் அந்த அட்டவணையின் பத்தி IV இல் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்
உள்ளுராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்)

யாழ்ப்பாணம்
1965-ம் ஆண்டு தை 30-ம்.உ.

அட்டவணை

| பத்தி I கிராமசபைகளின் பெயர் | பத்தி II திகதி | பத்தி III நேரம் | பத்தி IV இடம் |
|---|---|---|---|
| எழுவைதீவு | 13-2-65 | 9-30 மு. ப. | கிராமசபை மடம், எழுவைதீவு |
| அனலைதீவு | 13-2-65 | 11-30 மு. ப. | கிராமச்சபை அலுவலகம் |
| எழுவை | 19-2-65 | 9-00 மு. ப | கிராமச்சபை அலுவலகம்; மல்லாகம் |
| நீர்வேலி | 19 2-65 | 10-00 மு. ப. | கிராமச்சபை அலுவலகம், |
| கராச்சி | 19-2-65 | 1-30 பி. ப. | கிராமசபை அலுவலகம் |
| காரைதீவு | 20-2-65 | 9-00 மு. ப. | கிராமசபை அலுவலகம் (துறைமுகம்) |
| மல்லாகம் | 20-2-65 | 11-00 மு. ப. | கிராமசபை அலுவலகம் |

---

### "மடல் ஏருப்பெண்! கடல் அன்னை காமம் உழன்றும்!"

ஏடும-எழுத்தாணியும் நல்லோரும் உருவாக்கிய, உத்தம உலகைச் செங்கோல் வழியில் "திரு"வும்-புண்ணியமும்-வாழ்க்கையும்-இனி நாகப் பெரிய, ஆடவர்-மகளிர்-இளைஞரின் திரையை. மகான் திருவள்ளுவர் படம் பிடித்துக் கவனித்தார்!!!

இன்றுள்ள படத்தில்,மாயவிலை பாவம்-ஆடம்பரம்-வாழ்க்கை, சட்டவிழ்த்து திசை மீறிக் குமுறுகிறது. "பாவனம்" எப்படி வரும்? மேற்காட்டிய பாட்டே பதில்! 'திரு' விலகியது!!

வித்துவக்கலைஞன், கந்தரோடை, சன்மார்க்க சவடம். 1544

---

### விற்பனைக்கு

அரியாலையில் குளத்துக்குக் கிட்ட 40 பரப்பு தெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நேரில் திருமதி இராஜமணி மயில்வாகனம், அராலி வடக்கு. 1531

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 4 ஸ்ரீஏன்ரம் சுப்பர் மோட்டார்சைக்கின் விற்பனைக்கு உண்டு பார்வையிடலாம். அத்தி மோட்டார் வேர்க்ஸ், 120, பலாலி ரோட், யாழ்ப்பாணம். 1532

---

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசப் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-55 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.


வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

# சவரின் வளையல்கள்

சந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50, M 27 ஜோடி ரூ 12 50 M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00 M 29 ஜோடி ரூ. 15 00 M 47 ஜோடி ரூ 18 50

## ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.



# மகிழ்ச்சிகரமான ஒரு நற்செய்தி

## குதிரை மார்க் வாளிகள்

தெல்லிப்பழை காங்கேசன்துறை வீதியில் உள்ள 'எல்பிகெம் ஹவுஸ்' என்னும் எங்கள் புதிய நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட 'குதிரை மார்க' வாளிகள் உங்களது முக்கிய பாவனைக்குத் தேவைப்படும் எல்லாவித அளவுகளிலும் இப்பொழுது உங்களுக்குக் கிடைக்ககூடியதாயிருப்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்:

'குதிரை மார்க்' வாளிகள் மேல்தரமான உயர்ந்த ரக உலோகத் தகட்டில் நீடித்தகாலப் பாவனைக்கு உகந்ததாய், கெட்டியானதாய், உறுதியான அமைப்பும் வார்ப்பும் உள்ளதாய் துத்தநாகப் பூச்சோடு எங்கள் புதிய "கல்வெக்ஸ்" உலையில் உருவாக்கப்பட்டவை.

## 'எல்பிகெம் ஹவுஸ்'

கே. கே. எஸ். வீதி, : தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரி–சிறிமா ஒப்பந்தத்தை அமுல்செய்ய நிர்வாகக்குழு

## கொழும்பில் நிறுவப்பட்டுள்ளது

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள இந்தியர்கள் பிரச்னை சம்பந்தமாக சென்ற வருடம் செய்துகொள்ளப்பட்ட சாஸ்திரி–சிறிமா ஒப்பந்தத்தை அமுல்நடத்துவென இரு அரசாங்கங்களினதும் அதிகாரிகள் கொண்ட நிர்வாகப்பகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட ஒப்பந்தத்தை அமுல்செயவதற்கான வழிவகைகளை இந்த நிர்வாகப்பகுதி ஆராயும். அத்துடன் அதற்கான சகல ஒழுங்குகளையும் இந்தப்பகுதியே செய்யும் எனவும் கூறப்படுகிறது.

## நிதி அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இன்னும் தேர்தல் பிரசாரம் எதிலும் ஈடுபடவில்லை. அவர் தமது தொகுதியான யட்டியாந்தோட்டைக்குச் செல்லவில்லை. லண்டன் சென்றசமயம் அவர் திடீரென சுகயீனமுற்றிருந்தார். அதன்பேரில் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு டாக்டர்கள் வைத்தியாலோசனை தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரமே டாக்டர் பெரேரா இன்னும் தேர்தல் வேலைகளில் ஈடுபடவில்லை. எனினும் இம்மாத மத்தியில் அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் எனத் தெரியவருகிறது.


REGAL — JAFFNA
NOW SHOWING
PARIS
I LOVE YOU
(Flaming Eastman Color)
(Adults Only)

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485
கல்யாணகுமார்
மாலினி, தங்கவேல்
நடித்த
அழகு நிலா

ராஜா சினிமா (சுழிபுரம்)
சிவாஜி கணேசன்
அஞ்சலிதேவி
நடித்த
பூங்கோதை


## இன்னும் முடிவில்லை

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் நிர்வாகிகள் நான்காவது முறையாகக் கூடி சில்லறை ஊழியர்களாக 871 பேரை நியமிப்பது பற்றி ஆராய்வர். கூ. மொ. ஸ்தாபனத்தில் உதவி ஆணையாளராக கடமையாற்றும் திரு ஜெயவர்த்தன தற்சமயம் சுதந்திரக்கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்றும் அதன் காரணமாக அவர் கூ. மொ. ஸ்தாபனத்தின் நிர்வாகிகள் கூடும் சமயத்தில் பிரசன்னமாயிருக்க முடியாததன் காரணத்தினாலேயே இந்த விஷயம் பின்போடப்பட்டு வந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது.

## வயலில் கிடந்த பிரேதம்

யாழ்ப்பாணம், சனி

நாவற்குழியில் உள்ள ஒரு வயலில் சுமார் 50 வயது மதிப்பிடத்தக்க ஒருவரின் பிரேதம் நேற்றுக் காலை 9 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தலையில் காயங்கள் காணப்பட்டதாகவும், விசாரணை இன்னும் முடிவடையவில்லையென்றும் கூறப்படுகிறது. தற்கொலையா அல்லது கொலையா என்பது பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை. சாவகச்சேரிப் பொலிசார் இதுபற்றி புலன் விசாரணை செய்துவருகிறார்கள்.

## 'கடமையை சரிவர செய்யுங்கள்'

கொழும்பு, வெள்ளி

வானொலிநிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்கள் தேர்தல் காலத்தில் எந்தக் கட்சியையும் சாராது, தமது கடமையை சீரான முறையில் பாரபட்சமில்லாது செய்யவேண்டும் என ஒலிபரப்பு டைரக்டர் திரு. எல். பி சேனநாயக்கா சுற்றுநிருபம் விடுத்துள்ளார். இந்த ஒழுங்கு கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## ரயில் விபத்து

### இருவர் மரணம்

கல்கத்தா, பெப். 5

கல்கத்தாவிற்கு 90 மைல் தெற்கேயுள்ள சண்டிகாட் என்னுமிடத்தில் சரக்குவண்டி ஒன்று இன்னொரு புகையிரதத்துடன் மோதுண்டதால் இருவர் மரணமானார்கள்; 5 பேர் படுகாயமடைந்தார்கள்.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

கைதடி அரசினர் வயோதிபர் இல்லத்தில் உள்ள சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. விநாயகர் பிரதிஷ்டை, ஆலயமணி அங்குரார்ப்பணம், மகாகும்பாபிஷேகம் ஆகியவை இன்றைய முக்கிய நிகழ்ச்சிகளாகும். இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

ஃ ஃ ஃ

பொன்னாலை வரதராஜப் பெருமாள் இலட்சார்ச்சனை இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து இவ்வர்ச்சனை 10 நாட்களுக்கு நடைபெறும்.

## எப்படி தப்புவது?

### மகாசங்கம் ஆராயும்

கொழும்பு, வெள்ளி

மத்திய மாகாணத்திலுள்ள மகா சங்கத்தைச் சேர்ந்த மூன்று நிலாமைகளும் மற்றைய சங்கத்தினர்களும் ஒன்றுகூடி ஒரு மாபெரும் கூட்டத்தை தலதா மாளிகையில் கூட்டுவார்கள் எனத் தெரியவருகிறது. இக் கூட்டத்தில் மார்க்ஸிய வகுப்பினரது எதிர்ப்பிலிருந்து சாசனத்தைப் பாதுகாப்பது பற்றி ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

## 'அங்கீகரித்து உதவியளிக்குக'

யாழ்ப்பாணம், சனி

'கோதோணை ஸ்போர்ட்ஸ் கிளப்' யாழ்ப்பாண மக்களுக்கு சாதி சமய பேதம் எதுவுமில்லாமல் உடல், உளவளர்ச்சிக்கு தொண்டாற்றி வருவதாகவும், இச் சங்கத்தின சமூக, கலாச்சார சேவைகளை மதித்து அங்கீகரித்து உதவி அளிக்குமாறு யாழ்ப்பாண மாநகரசபையில் ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் இந்தப் பிரேரணையைக் கொண்டுவரு[illegible] முன்மொழிந்து கொடுத்துள்ளார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட

## விவசாயிகளுக்கு உதவுமாறு அமைச்சர் சிபார்சு

கொழும்பு, வெள்ளி

தற்பொழுது நாடெங்கும் நிலவும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு உதவி அளிக்க வேண்டுமென உணவு விவசாய மீன்பிடி மந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளார்.

மந்திரியின் இந்த சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் பெருந்தொகையான விவசாயிகள் வரட்சி குறைந்து நிலைமை சீராகும்வரை உதவி பெறுவார்கள். இப்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாக விவசாயத்தை நம்பி வாழும் பெருந்தொகையான விவசாயக் குடும்பங்கள் பெரும் கஷ்டமடைந்துவருகின்றன. நாடெங்கும் நிலவும் வரட்சியினால் நெற்செய்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதன் காரணமாக அரிசிக்கு பஞ்சம் ஏற்படுமோ என்றுகூட மக்களில் பலர் அஞ்சுகின்றனர்.

# மாணவர்களுக்கு விவசாயத்தில் ஆர்வம் ஊட்டுக

## தலைமையாசிரியர்கள் மகாநாட்டில் உரை

சுழிபுரம், வெள்ளி

வீட்டுத் தோட்டத்தில் அதிகம் கவனம் செலுத்துவதன் மூலம் அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதுடன் துணை உணவுப் பொருள்களான குரக்கன், சாமை, பயறு போன்றவற்றை உற்பத்தி செய்து உணவு கஷ்டத்தைப் போக்கலாம் என வட்டுக்கோட்டை தொகுதி பாடசாலைகள் தலைமையாசிரியர்கள் மகாநாட்டில் வலிமேற்கு விவசாய போதனாசிரியர் திரு. எம். நடராசா குறிப்பிட்டார்.

திரு. செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு நடராசா மேலும் குறிப்பிட்டதாவது: "பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் இளமையிலேயே தோட்டச் செய்கைக்கு வேண்டிய சகல முறைகளையும் தெரிந்துகொள்வதன் மூலம் தமது பிற்கால உணவு பிரச்னையை சமாளித்துக் கொள்ளலாம். வருங்கால தொழில் கல்வியின் வளர்ச்சியில்தான் அதிகம் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் பிள்ளைகளின் வருங்கால வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய முறையில் கல்வியை போதிக்கவேண்டும். தாம் பெற்ற கல்வியைக் கொண்டு தமது வாழ்வை வளமாக்க வேண்டியது பிள்ளைகளின் கடமையாகும். சிறு தானியங்களை நட்டு பயனடையவும், எமது நாட்டின் உணவு பிரச்னையின் ஒரு பகுதியை பூர்த்தியாக்கவும் தோட்டச் செய்கையை பாடசாலைகளில் நடத்தவேண்டும். இப் பணியில் ஆசிரியர் பங்கு மிகவும் பெரியதாகும்.

## உயரும் வாழ்க்கைச் செலவு!

கொழும்பு, வெள்ளி

வாழ்க்கைச்செலவு மீண்டும் உயர்ந்து வருகிறது. இப்பொழுது வாழ்க்கைச்செலவு 112.5 ஆகும். கடந்தவருடம் மத்தியில் 118.2 ஆக உயர்ந்திருந்து பின்னர் சிறிது சிறிதாகக் குறைந்து சென்றடிசம்பர் மாதம் 112.4 ஆக இருந்தது. இப்பொழுது 112.5 ஆக உயர்ந்திருப்பதற்கு சில பொருட்களின் விலையில் ஏற்றம் கண்டிருப்பதே காரணமாகும்.

வாழ்க்கைச்செலவைக் குறைக்க கடந்த பல வருடங்களாக முயற்சி செய்யப்பட்டபோதிலும் அவை பலனளிக்கவில்லை.

## சென்னை மாணவர் ஹிந்தி எதிர்ப்பு குழு

சென்னை, பெப். 5

சென்னை சட்டக்கல்லூரி மாணவர் எம். எஸ். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மாணவர் கூட்டமொன்றில் தமிழக மாணவர் ஹிந்தி ஆதிக்க எதிர்ப்புக்குழு என்ற ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்திருந்த மாணவர் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்து அறிக்கை வெளியிடுவதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்திலிருந்து ஆட்சிமொழி பற்றிய 17-வது அத்தியாயம் அடியோடு நீக்கப்படவேண்டுமென்றும் ஹிந்தி மொழியை ஆட்சிமொழியாகவோ இணைப்பு மொழியாகவோ வேறு எந்த வகையிலோ தமிழகத்தின் இந்தத் தலைமுறை மட்டுமல்லாமல் இனிவரும் எந்தத் தலைமுறையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்றும் இந்த இலட்சியம் நிறைவேறும்வரை மாணவர்கள் போராட்டம் ஓயாது ஒழியாது நீடிக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## மரண அறிவித்தல்

பாலசிங்கம் பேஜனசாலை, நாகலிங்கம் பேஜனசாலை அதிபரின் புதல்வி நாகேஸ்வரி சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (6-2-65) காலை 9 மணிக்கு கோரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

எங்கள் ஸ்தாபனம் திங்கட்கிழமைவரை மூடியிருக்கும்.

நா. சின்னத்துரை,
நா. செல்லையா 1546


5-வது வெற்றி வாரம்!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30

சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி பிளாசா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
மற்றும் 6 சினிமாக்கள் திரைகளில்
ஜெமினி கணேசன் - சாவித்திரி
நடித்த
கற்பகம்


## தலைவர்களை இழந்த......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| ஆ. சின்னத்தம்பி மனைவி | 10-00 |
| சி. தம்பித்துரை மனைவி, 18 வயதுடைய ஒரு பெண் | 30-00 |
| சி. செல்லத்துரை மனைவி, 4 பிள்ளைகள் (மூத்த பெண்ணின் வயது 16) | 50-00 |
| வி. சிற்றம்பலம் மனைவி, 17 வயதுடைய ஒரு பெண் | 20-00 |
| எஸ். ஏ. யோசப் மனைவி இல்லை, 4 பிள்ளைகள் (சகோதரியின் பிள்ளைகள், சகோதரி, (மூத்த ஆணின் வயது 7), இரண்டாவது ஆணின் வயது 13) | 25-00 |
| ரி. திருச்செல்வம் கைம்பெண் (விவாகமாகிக் கணவனை இழந்து 42 நாட்கள்) | 25-00 |

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் சார்பில் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org